தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2023 ஒத்தோபர் 20 |

பன்னாட்டு நாணய நிதிய பணிக்குழுவொன்று பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார சீராக்கல் செயற்றிட்டம் தொடர்பிலான முதலாவது மீளாய்விற்காக 2023 செத்தெம்பர் 14-27 காலப்பகுதியில் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தது. பணிக்குழுவின் பின்னர் கலந்துரையாடல்கள் தொடர்ந்ததுடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் முதலாவது மீளாய்வினை நிறைவுசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினை பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் எட்டியுள்ளனர். பணிக்குழுவானது பின்வரும் அறிக்கையினை வெளியிட்டதுடன் அதனைக் கீழுள்ள இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

https://www.imf.org/en/News/Articles/2023/10/19/pr23357-sri-lanka-imf-reaches-sla-on-the-review-of-sri-lanka-extended-fund-facility-arrangement

## இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் முதலாவது மீளாய்வு தொடர்பிலான அலுவலர் மட்ட உடன்படிக்கையினை பன்னாட்டு நாணய நிதியம் எட்டியுள்ளது.

நாடொன்றிற்கு விஜயம் செய்ததன் பின்னரான பூர்வாங்க கண்டறிகைகளைத் தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் குழுக்களின் அறிக்கைகளை விஜயத்தின் முடிவில் மேற்கொள்ளப்படுகின்ற ஊடக அறிக்கைகள் உள்ளடக்கின்றன. இவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களாவதுடன் அவை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இப்பணிக்குழுவின் பூர்வாங்க கண்டறிகைகளின் அடிப்படையில், அலுவலர்கள் அறிக்கையொன்றினைத் தயாரிப்பதுடன் முகாமைத்துவத்தின் ஒப்புதலிற்கு உட்பட்டு இது கலந்துரையாடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் பொருட்டு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

- 48 மாத காலம் கொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் முதலாவது மீளாய்வினை நிறைவுசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினை பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் எட்டியுள்ளனர். பன்னாட்டு நாணய நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை என்பவற்றினால் மீளாய்விற்கான ஒப்புதலளிக்கப்பட்டவுடன் சி.எ.உ 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 330 மில்லியன்) தொகைக்கான நிதியிடல் இலங்கைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருக்கும்.
- பேரண்டப்பொருளாதார கொள்கை மறுசீரமைப்புக்கள் பலனளிக்கத் தொடங்கியுள்ளதுடன் பொருளாதாரம் உறுதிப்பாட்டின் தற்காலிக சமிக்ஞைகளைக் காண்பிக்கின்றது. மறுசீரமைப்பு உத்வேகத்தினை நிலைபெறச்செய்தல் மற்றும் ஆளுகைப் பலவீனங்கள் மற்றும் ஊழலினால் பாதிப்படையக்கூடியதன்மைகளை நிவர்த்தி செய்தல் என்பன பொருளாதாரத்தினை நீடித்து நிலைத்திருக்கின்ற மீட்சி மற்றும் நிலையான மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சி என்பவற்றினை நோக்கிய பாதையில் கொண்டு செல்வதற்கு இன்றியமையாதனவாகும்.
- பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் மூலம் மீளாய்வினை நிறைவு செய்தலானது பின்வருவனவற்றைத் தேவைப்படுத்துகின்றது: (i) அனைத்து முன்கூட்டிய நடவடிக்கைகளும் அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்துதல் மற்றும் (ii) நிதியிடல் உத்தரவாத மீளாய்வுகளின் நிறைவு.

**வொஷிங்டன் டிசி:** கொழும்பிலும் மரகேஷில் நடைபெற்ற வருடாந்த கூட்டங்களிலும் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களின் பின்னர் இலங்கைக்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் சிரேஷ்ட பணிக்குழுத் தலைவர் திரு. பீட்டர் ப்ரூயர் மற்றும் பிரதிப் பணிக்குழுத் தலைவர் செல்வி. கட்சியரினா ஸ்விரிட்சென்கா ஆகியோர் பின்வரும் அறிக்கையை வெளியிட்டனர்:

“48 மாத காலம் கொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடொன்றினால் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றின் கீழான முதலாவது மீளாய்வு குறித்து பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுவானது இலங்கை அதிகாரிகளுடன் அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்றினை எட்டியுள்ளது. 2023 மாச்சு 20 அன்று சி.எ.உ. 2.3 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட மொத்த தொகையொன்றிற்கான உடன்படிக்கைக்குப் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

“அலுவலர் மட்ட உடன்படிக்கையானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை என்பவற்றின் ஒப்புதலிற்கு உட்பட்டதொன்றாகக் காணப்படுவதுடன் இது (i) அனைத்து முன்கூட்டிய நடவடிக்கைகளும் அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்படுதல் மற்றும் (ii) மறுசீரமைப்பானது காலந்தவறாத முறையிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் படுகடன் இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்திலும் நிறைவு செய்யப்படுமென்ற நம்பிக்கையினை அளிக்கும் பொருட்டு படுகடன் மறுசீரமைப்பானது போதியளவிலான முன்னேற்றத்தினை அடைந்துள்ளதா என்பதனை உறுதிப்படுத்துவதனையும் உள்ளடக்கிய நிதியிடல் உத்தரவாத மீளாய்வுகளின் நிறைவு என்பவற்றில் தங்கியுள்ளது.

“பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் ஒப்புதலின் பின்னர் இலங்கை சி.எ.உ. 254 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 330 மில்லியன்) தொகைக்கான அணுகலினைக் கொண்டிருக்கும் என்பதுடன் இது ஏற்பாட்டின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்தின் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியிடல் ஆதரவினை சி.எ.உ. 508 மில்லியனிற்குக் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 660 மில்லியன்) கொண்டு வரும்.

“விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான பேராவல்மிக்க மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதுடன் துரிதமான பணவீக்க வீழ்ச்சி மற்றும் இவ்வாண்டின் இறுதிப்பகுதியளவில் எதிர்பார்க்கப்படுகின்ற குறிப்பிடத்தக்கதொரு இறைச் சீராக்கம் என்பன உள்ளடங்கலாக அவர்களது மறுசீரமைப்பு முயற்சிகள் பாராட்டத்தக்கவையாகும். செலவின நிலுவைகள் நீங்கலாக யூன் இறுதிக்கான அனைத்து கணியம்சார் செயலாற்றப் பிரமாணங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் யூன் இறுதியிலான நிகழ்ச்சித்திட்ட செயலாற்றம் திருப்திகரமாயமைந்தது. வரி வருவாய்கள் நீங்கலாக அனைத்து குறிகாட்டி இலக்குகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அநேகமான கட்டமைப்புசார் அளவுகோல்கள் 2023 செத்தெம்பர் இறுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டன அல்லது தாமதமாக பூர்த்திசெய்யப்பட்டன. குறிப்பாக, அதிகாரிகள் ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையினைக் காலந்தவறாது வெளியிட்டனர். ஆசியாவில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுகையினைக் கண்டறிகின்ற செயற்பாட்டினை மேற்கொண்ட முதலாவது நாடு இலங்கையாகும். நிகழ்ச்சித்திட்ட சுட்டளவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2024 ஆண்டு காலப்பகுதியில் இறைத் திரட்சிக்கு ஆதரவளிப்பதற்கான அரசிறை வழிமுறைகள் மீதான முன்னேற்றம் இன்னும் தொடர்கின்றது.

“பொருளாதாரமானது உறுதிப்பாட்டின் தற்காலிக சமிக்ஞைகளைக் காண்பிக்கின்றது. பணவீக்கமானது 2022 செத்தெம்பரில் காணப்பட்ட 70 சதவீத உச்சத்திலிருந்து 2023 செத்தெம்பரில் 1.3 சதவீதத்திற்குக் குறைவடைந்துள்ளதுடன் மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் இவ்வாண்டின் மாச்சு தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.5 பில்லியனினால் அதிகரித்ததுடன் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை தளர்வடைந்துள்ளது. உறுதிப்பாட்டின் மீதான இம்முன்கூட்டிய சமிக்ஞைகள் காணப்பட்ட போதிலும் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இரண்டாவது காலாண்டில் உண்மையான மொ.உ.உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமை மற்றும் உயர் பொருளாதார குறிகாட்டிகள் கலப்பான சமிக்ஞைகளைத் தொடர்ந்து வழங்குகின்றமை என்பவற்றுடன் வளர்ச்சி உத்வேகம் தொடர்ந்தும் மிதமானதாகவுள்ளது. நீடித்த மறுசீரமைப்புக் கலந்துரையாடல்களின் விளைவொன்றாக இலங்கையின் வெளிநாட்டு நிலைமை பலவீனமடைந்துள்ளதுடன் அண்மைய மாதங்களில் ஒதுக்குத் திரட்சியும் மெதுவடைந்துள்ளது. படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மையை மீட்டெடுத்தலுடன் இசைந்த படுகடன் மறுசீரமைப்பு மீதான விரைவான உடன்பாடானது இலங்கை வியாபாரங்களையும் வெளிநாட்டு நிதியிடலையும் வரையறைக்குட்படுத்துகின்ற நிச்சயமற்றதன்மையைத் தீர்ப்பதற்கு முக்கியமாயமையும்.

“மறுசீரமைப்பு உத்வேகத்தினை நீடித்துநிலைபெறச்செய்வதானது பொருளாதாரத்தினை நிலையான மீட்சியொன்றினை நோக்கி வழிநடத்துவதிலும் நிலையான மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்கும் மிக முக்கியமானதாகும். தேவையான வரி வழிமுறைகளைப் பின்பற்றுதல், வரி நிர்வாகத்தினை வலுப்படுத்தல் மற்றும் வரி ஏய்ப்பினைத் தீவிரமாக இல்லாதொழித்தல் என்பவற்றின் மூலம் அரசிறையை அதிகரிப்பதற்கும் சிறந்த ஆளுகையினைச் சமிக்ஞையிடுவதற்குமான அதிகாரிகளின் அர்ப்பணிப்பினை நாங்கள் வரவேற்கிறோம். எரிபொருள் மற்றும் மின்சார விலையிடலில் செலவின மீட்சியினைப் பேணுவதானது அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளிலிருந்து எழுகின்ற இறை இடர்நேர்வுகளைத் தணிக்கத் துணைபுரிகின்றது. சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை மேலும் வலுப்படுத்துவதானது ஏழ்மையிலுள்ளவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்தும் முக்கியமானதாயுள்ளது. பணவீக்கமானது எதிர்பார்த்ததிலும் பார்க்க விரைவாக குறைவடைந்துள்ள வேளையில், பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதற்கும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கும் தொடர்ச்சியான

கண்காணிப்பானது தேவைப்படுத்தப்படுகின்றது. தொடர்ச்சியான வெளிநாட்டு நிச்சயமற்றதன்மைக்கு எதிராக, வலுவான ஒதுக்குத் திரட்சியின் ஊடாக வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை மீளக்கட்டியெழுப்புவதானது தொடர்ந்தும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

‘‘அதிகாரிகளின் உள்நாட்டுப் படுகடன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்து, பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட சுட்டளவுகள் மற்றும் படுகடன் இலக்குகள் என்பவற்றிற்கு இசைவான படுகடன் மறுசீரமைப்பு குறித்து உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களுடனான உடன்படிக்கையொன்றினைப் பெற்றுக்கொள்வதானது முக்கியமான அடுத்த படிமுறையாகக் காணப்படுகின்றது. இலங்கைக்கும் சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கிக்கும் இடையிலான தற்காலிக உடன்படிக்கையினை நாம் கவனத்தில் கொண்டுள்ளதுடன் விபரங்கள் கிடைக்கப்பெறும் போது அவற்றைப் பகுப்பாய்வு செய்ய எதிர்பார்த்துள்ளோம். அனைத்து உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களையும் முன்னோக்கிச் செல்லுமாறும் அவர்கள் வழங்கிய நிதியிடல் உத்தரவாதங்களுடன் இசைந்து செல்லும் விதத்திலான பொருத்தமான படுகடன் மறுசீரமைப்பிற்கு உடன்படுமாறும் நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம். வர்த்தகக் கடன்வழங்குநர்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதனை நாங்கள் புரிந்துகொண்டுள்ளதுடன் வலுவானதொரு முறையில் படுகடன் நிலைத்திருக்கும்தன்மையை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்துகின்றோம். தாமதங்கள் இலங்கைக்கான பொருளாதாரத் தோற்றப்பாட்டினை மோசமடையச்செய்து, அதன் நிதியிடல் இடைவெளிகளை விரிவுபடுத்தி, நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கான அதன் திரும்பலினைத் தடுத்து, அதன்மூலம் மீளச்செலுத்துவதற்கான அதன் இயலளவினைக் குறைக்கும்.

‘‘அண்மையில் வெளியிடப்பட்ட ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரிகளின் அர்ப்பணிப்பானது வரவேற்கத்தக்கதொரு படிமுறையாகும். பொருளாதார நம்பிக்கையினை மீளக்கட்டியெழுப்புவதற்கும் வளர்ச்சியினை மேலும் வலுவாகவும் அனைத்தையுமுள்ளடக்கியதாகவும் மாற்றுவதற்கும் ஊழல் இடர்நேர்வுகளைத் தீர்த்துவைப்பதற்கும் பொறுப்புக்கூறலினை வலுப்படுத்துவதற்கும் உறுதியான படிமுறைகளை மேற்கொள்வது அத்தியாவசியமானதொன்றாகும்.

‘‘சனாதிபதி மற்றும் நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, திறைசேரியின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன மற்றும் அரசாங்கத்தினதும் இலங்கை மத்திய வங்கியினதும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோருடன் பன்னாட்டு நாணய நிதியக் குழு கூட்டங்களை நடத்தியது. பன்னாட்டு நாணய நிதியக் குழு பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறையிலிருந்தான பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் ஆகியோரையும் சந்தித்தது.

‘‘சிறப்பான ஒத்துழைப்பு மற்றும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் என்பவற்றிற்கு அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிப்பதற்குக் குழு விரும்புகின்றது.’’